***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.172/2024 – P.W. 1 (LW-1)***

| | |
|---|---|
| *Name* | சுமதி |
| *Father/Husband's Name* | மகேந்திரன் |
| *Village* | சித்தேரி |
| *Age* | *45* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 12.11.2025

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். மகேந்திரன் என்பவர் என் கணவர் ஆவார். அவர் விபத்தில் இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பக்கத்து ஊர்க்காரர் ஆவார். கடந்த 07.03.2024 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் எனது கணவர் வேலைக்காக பாரத் என்பவர் ஊதா கலர் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் சித்தேரி சமுத்துவபுரம் மெயின்ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வடக்கு பக்கம் திரும்பும்போது சென்றுக் கொண்டிருந்த போது, வடக்கு நோக்கி வந்த கருப்பு கலர் புல்லட் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த பாரதிராஜா என்பவர் ஓட்டி வந்து என் கணவர் பயணித்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி என் கணவருக்கும் பாரத் என்பவருக்கும் அடிபட்டு விட்டது என்று எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன்.

2. அதற்கு முன்பாகவே காயம்பட்ட எனது கணவரையும், பாரத்தையும், 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார். நான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரித்தபோது, எனது கணவர் மற்றும் பாரத் ஆகியோர்களை மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள் என்ற

தகவலை கேள்விபட்டு, நான் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாகவே எனது கணவர் இறந்துவிட்டார். நான் மறுநாள் காலையில் கோட்டூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு பகுதி முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 07.03.2024 ஆம் தேதியன்று எனது கணவர், சுதாகரின் மகன் பரத் என்பவருக்கு சொந்தமான அவரது TN 50 L7971 Bajaj Discover இருசக்கர வாகனத்தில் பரத் என்பவர் ஓட்ட எனது கணவரும், பரத்தின் தந்தை சுதாகர் என்பவரும் பின்னார் அமர்ந்துக்கொண்டார்கள் என்றும், மேற்படி மூவரும் மன்னார்குடி செல்வதற்காக சித்தேரி ஜங்சன் பிரிவு சாலை மகாமாரியம்மன் கோவிலடி உ ண்டியல் முன்பாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து வடக்கு நோக்கி திரும்பும்போது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 50 AW 3319 Enfiled Bullet ஐ ஆஜர் எதிரி ஹாரன் அடிக்காமலும், ஆஜராக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து சுமார் இரவு 7.30 மணிப்போல் என் கணவர் பயணித்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக நான் கேள்விபட்டேன் என்றும், மேற்படி சம்பவத்தை நான் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்னதாக காயம்பட்ட என் கணவர், பரத் ஆகியோர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால்ச ரிதான். எனது கணவர் மற்றும் பரத் ஆகியோர்கள் ஸ்கூட்டில் சென்று விபத்து ஏற்பட்ட விவரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் போலீசார் எழுதிக்கொண்டு அதில் என்னிடம்

கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரியின் ஆஜராக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் இல்லை என்றும், 3 பேர் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்று அதில் வாகனத்தை ஓட்டிய பரத் ஆஜராகிரதையாகவும், அதிவேகமாகவும் வாகனத்தை இயக்கியது தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காகஎதிரியை தொடர்புபடுத்தி பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 12.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.172/2024 – P.W.2 (LW-2)***

| | |
|---|---|
| *Name* | சுதாகர் |
| *Father/Husband's Name* | சௌந்தர்ராஜன் |
| *Village* | வடபாதி |
| *Age* | *46* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 12.11.2025

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். மகேந்திரன் என்பவரை தெரியும். அவர் தற்போது விபத்தில் இறந்துவிட்டார். அ.சா.1 சுமதியை தெரியும். அவர் இறந்துபோன மகேந்திரனின் மனைவியாவார். சாட்சி பரத் எனது மகன் ஆவார். சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் பழனியப்பன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். கடந்த 07.03.2024-ம் தேதி இரவு 7.30 மணியளவில் எனது மகன் பரத்திற்கு சொந்தமான புளு கலர் TN 50 L7971 Bajaj Discover இருசக்கர வாகனத்தில் எனது மகன் பரத்த இருசக்கர வாகனத்தை ஓட்டினார். நானும், மகேந்திரனும் பின்னால் அமர்ந்திருந்தோம்.

2. நாங்கள் மன்னார்குடி செல்வதற்காக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வடக்கு புறம் திரும்பும்போது, (சமத்துவபுரம் ஆர்ச் கோவிலடி உண்டியல்) வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆஜர் எதிரி அவர் ஓட்டி வந்த TN 50 AW 3319 Enfiled Bullet ஐ ஹாரன் அடிக்காமல் செம ஸ்பீடாக ஓட்டி வந்து, நாங்கள் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதில் எனது மகன் பரத்திற்கு வலது கை, வலது காலில் காயம் ஏற்பட்டது. மகேந்திரன் என்பவருக்கு பின்பக்க தலையில் அடிபட்டு, ரத்தம் வந்ததது. எனக்கு வலது நெற்றியில் அடிபட்டுவிட்டது.

3. அப்போது அருகிலிருந்து பழனியப்பன், கார்த்திகேயன் ஆகியோர்கள் ஆம்புனலஸிற்கு தகவல் சொல்லி காயம் பட்ட நாங்கள் மூவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். காயம்பட்ட மகேந்திரனை மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்கள். மகேந்திரன் என்பவர் அன்றையதினமே 11.30 மணிக்கு இறந்துவிட்டார் என்ற தகவல் எனக்கு கிடைத்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால்ச ரிதான். என்னை போலீசார் விபத்து நடந்து 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். விபத்து நடந்த இடத்திற்கும், சமுத்துவபுரம் ஆர்ச்க்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும்.விபத்து நடந்த சத்தம் கேட்ட பிறகு பட்டியல் சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் பழனியப்பன் இருவரும் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

2. விபத்து நடந்தற்கு பிறகு எனக்கு சுயநினைவு இருந்தது என்றால் சரிதான்.நான்தான் விபத்து குறித்து கார்த்திகேயன் மற்றும் பழனியப்பன் இருவரிடமும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தானது மகாமாரியம்மன் கோவில் உண்டியலடி ஓட்டி நடந்தது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் ஒரு இடத்திலிருந்து வளையும்போது இன்டிகேட்டர் போட்டு நின்று நிதானமாக தான் திரும்பவேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனது மகன் சுமார் 30 மீட்டர் வேகத்தில் தான் வாகனத்தை ஓட்டி வந்தார்.விபத்து சமயத்தில் எனது மகனுக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. நான் இருசக்கர வாகனத்தில் கடைசியில் அமர்ந்துவந்தேன்.

3. வாகனம் வந்து மோதியபோது எனக்கு முன்னால் அமர்ந்திருந்த இருநபர்களும் அடிபட்டு கீழே கிடந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு நான்கு திசைகளும் தெரியும் என்றால் சரிதான். எனது மகன் தான் விபத்து சமயத்தில் ஹாரன் அடிக்காமலும், இன்டிகேட்டர் போடாமல் சாலையில் குறுக்கே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனம் என்பது இரண்டு நபர்கள் மட்டுமே பயணிக்க கூடியது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றதால் வளைவில் திரும்பும்போது கட்டுபாட்டை இழந்து

விபத்து ஏற்பட்டதென்றால் சரியல்ல. வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரியை தொடர்புபடுத்தி பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 12.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.172/2024 – P.W.3 (LW-3)***

| | |
|---|---|
| *Name* | பரத் |
| *Father/Husband's Name* | சுதாகர் |
| *Village* | வடபாதி |
| *Age* | *20* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* 12.11.2025

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து லெட்சுமி பர்னிச்சர் கடையில் வேலை செய்து வருகிறேன். மகேந்திரன் என்பவரை தெரியும். அவர் தற்போது விபத்தில் இறந்துவிட்டார். அ.சா.1 ஐ தெரியாது. அ.சா.2 சுதாகர் எனது தந்தையாவார். சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் பழனியப்பன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை விபத்தின் போது பார்த்தேன். கடந்த 07.03.2024-ம் தேதி இரவு 7.00 மணியளவில் எனக்கு சொந்தமான புளு கலர் TN 50 L7971 Bajaj Discover இருசக்கர வாகனத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட என் அப்பாவும், மகேந்திரனும் பின்னால் அமர்ந்திருந்தார்கள்.

2. நாங்கள் மன்னார்குடி செல்வதற்காக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சித்தேரி பவுண்டடி உண்டியல் அருகே வடக்கு புறமாக திரும்பியபோது, மன்னார்குடியிலிருந்து வடபாதி நோக்கி ஆஜர் எதிரி அவர் ஓட்டி வந்த TN 50 AW 3319 Enfiled Bullet ஐ ஹாரன் அடிக்காமல் வேகமாக ஓட்டி வந்து, நாங்கள் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதில் எனக்கு வலது கை, வலது காலில் காயம் ஏற்பட்டது. மகேந்திரன் என்பவருக்கு தலையில் அடிபட்டு, ரத்தம் வந்ததது. என் அப்பாவிற்கு வலது முன் நெற்றியில் அடிபட்டுவிட்டது.

3. அப்போது அருகிலிருந்து பழனியப்பன், கார்த்திகேயன் ஆகியோர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி காயம் பட்ட நாங்கள் மூவரும் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். காயம்பட்ட மகேந்திரனை மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்கள். மகேந்திரன் என்பவர் அன்றையதினமே 11.00 மணிக்கு மேல் இறந்துவிட்டார் என்று கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் வேலைக்காக நாங்கள் செல்லவில்லை. மன்னார்குடி வருவதற்காக இருசக்கர வாகனத்தில் வந்தோம். சித்தேரி பேருந்து நிறுத்தம் அருகே தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் சித்தேரி பேருந்து நிறுத்தம் அருகே விழுந்து கிடந்த எங்களை மற்ற நபர்கள் தூக்கினார்கள் என்றால் சரிதான். ஆஜர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். மேற்கண்ட விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. விபத்து நடந்த முடிந்தபிறகு கார்த்திகேயன் மற்றும் பழனியப்பன் இருவரும் எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். விபத்து சமயத்தின்போது இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் என்பது இரண்டு நபர்கள் மட்டுமே பயணிக்க கூடியது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தான் ஹாரன் அடிக்காமலும், இன்டிகேட்டர் போடாமல் சாலையில் குறுக்கே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சித்தேரி சமுத்துவபுரத்திலிருந்து விபத்து நடந்த இடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 800 மீட்டர் தூரம் இருக்கும். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தில் நடுவில் அமர்ந்திருந்தார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றதால் வளைவில் திரும்பும்போது கட்டுபாட்டை இழந்து விபத்து ஏற்பட்டதென்றால் சரியல்ல. வாகன விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரியை

தொடர்புபடுத்தி பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 12.11.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.